**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 15/2022**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 03.03.2026 | | |
| பெயர்: | ரவி<br>(PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | சம்மந்தம் |
| கிராமம்: | மாணிக்கவாசல் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 52/2026 |

**முதல் விசாரணை : 03.03.2026**

நான் இவ்வழக்கின் 2ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 20.11.2021 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலான புஞ்சை பகுதி செலுத்திய ரசீது (**சர்வே எண் இல்லாததால்** எந்த இடத்திற்கு இந்த ரசீது செலுத்தப்பட்டது என தெளிவாக இல்லை என்ற காரணத்தால் பிரதிவாதி தரப்பில் **ஆட்சேபணை** செய்யப்பட்டது. ஆட்சேபணை தீர்ப்பின் போது பரிசீலனை செய்யப்படும்) **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 1ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 10.01.2022 தேதியிட்ட கோயில் பெயரில் ஏற்பட்ட பட்டா கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்

5. எனது பெயரிலான மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யபப்டுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.